DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : 189/2023 PW : 1

Name : யாதவகிரி Age –

S/o : பிச்சாண்டி Village

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

---

Date: 27.11.2025.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) கோபிகிருஷ்ணன் என்பவரை எனக்கு நேரடியாக தெரியும். விஜயகுமாரின் மனைவி மூலம் தான் எனக்கு கோபிகிருஷ்ணாவை தெரியும் என்றால் சரிதான். பிரதிவாதி ஸ்ரீகிருஷ்ணா இஞ்சினியரிங் என்ற பெயரில் சிறு தொழில் செய்த விபரம் எனக்கு தெரியும். 06.01.2023ம் தேதி நான் கொடுத்த அறிவிப்புற்கு பிரதிவாதி பதில் அறிவிப்பு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். 06.02.2023ம் தேதி பிரதிவாதி பதில் அறிவிப்பு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதில் உள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பை நீதிமன்றத்தில் வா.சா.ஆ.10 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வங்கி எண்.075610400028936 என்னுடைய வங்கி கணக்கு ஆகும். இதை என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் இதை சம்மந்தமாக பெயர் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வங்கி எண்ணிற்கு பிரதிவாதி பணத்தை செலுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. என் மனைவி விஜயகுமாரின் சகோதரி என்றால் சரிதான். பிரதிவாதி 12,05000/– ஆனந்தி கணக்கிற்கு பணம் கொடுத்த விபரம் எனக்கு தெரியும் விஜயகுமாருக்கு கொடுத்த விபரம் எனக்கு தெரியாது. பிரதிவாதி விஜயகுமாரின் ICICI வங்கி கணக்கிற்கு 9,39,500/– செலுத்தியுள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி விஜயகுமாரின் மனைவி வித்யாலட்சுமி

கணக்கிற்கு 1,96,000/- திரும்ப செலுத்தியுள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

2) மார்ச் 2021 முன்பே பிரதிவாதி 15,30,500/- செலுத்தியுள்ளார் என்றால் அவர் எனக்கு எதுவும் செலுத்தவில்லை. இந்த வழக்கில் பிரதிவாதி என்னிடமும் என் மனைவியிடமும் ரூ.15,25,000/- கடன் பெற்றுள்ளார் என சொல்லியுள்ளேன் என்றால் சரியாக எனக்கு கணக்கு தெரியவில்லை. என்னால் தனித்தனியாக தான் சொல்ல இயலும். பிரதிவாதி என் கணக்கிலும் மற்றவர் கணக்கிலும் சேர்த்து ரூ.15,30,500/- செலுத்தியுள்ளார் என்றால் என் கணக்கிலும், என் மனைவி கணக்கிலும் செலுத்தவில்லை. என் மனைவி கணக்கில் ரூ.3,35,000/- செலுத்தியுள்ளார். அது போல வியாபரத்தில் வந்த ரூ.1,20,000/- ஊக்க தொகையாக கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி விபரத்தை நான் முதல் விசாரணை வாக்குமூலத்திலும், பிராதிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 03.09.2009 அன்று கடன் பத்திரம் தாக்கல் செய்ததால் சொல்லியுள்ளேன் ஆனால் தேதி சொல்லவில்லை. அதை வாதுரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. கடன் பத்திரம் சம்மந்தமாக தாவாவிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 06.02.2023 பிரதிவாதி அவர் பதில் அறிவிப்பில் கடன் பத்திரம் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான் ஆனால் அவர் பொய்யான தகவலை சொல்லியுள்ளார். 20.02.2021 தேதியிட்ட குறுஞ்செய்தி ஒன்று இந்த வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் வருடம் தவறாக உள்ளது. வா.சா.ஆ.7 ஆவணம் 27.07.2025 தேதியன்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM
Digitally signed by S TASNEEM
Date: 2025.11.27 15:51:13 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.